අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# இஸ்லாம்

## வினாத்தாள் I & II



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 16 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**இஸ்லாம் - I, II** | **நேரம் : 3 மணித்தியாலம்**

**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**

வினாக்களை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

### இஸ்லாம் - I

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

1. இஸ்லாமிய நம்பிக்கை கோட்பாட்டை சுட்டும் அரபுப் பதம்
   1. பிக்ஹூ  2. ஷரீஆ  3. அகீதா  4. தப்ஸீர்

2. நாத்தீகவாதி என்பதைக் குறிக்கும் சொல்
   1. முனாபிக்  2. முர்தத்  3. முஷ்ரிக்  4. முல்ஹித்

3. துஆவுல் இஸ்திப்தாஹ் ஓதப்படும் சந்தர்ப்பம்
   1. சுஜூதின் பின் நடு இருப்பில்  2. தக்பீர் தஹ்ரீமுக்குப் பின்
   3. அத்தஹிய்யாத்தின் பின்  4. ருகூவிலிருந்து எழுந்ததும்

4. இக்லாஸ் எனும் பதம் குறிப்பது
   1. இறையச்சம்  2. உளத்தூய்மை  3. பற்றற்ற வாழ்வு  4. பேணுதல்

5. 'நான் உயிருடன் இருந்து இஸ்லாம் மடிவதை விட இஸ்லாம் உயிருடன் இருந்து தான் மடிவது மேல்' எனக் கூறிய இமாம்
   1. இமாம் அபூஹனீபா (றஹ்)  2. இமாம் ஷாபிஈ (றஹ்)
   3. இமாம் அஹ்மத் (றஹ்)  4. இமாம் மாலிக் (றஹ்)

6. குத்தாபுல் வஹி எனப்படுவோர்
   1. அல்குர்ஆனை மனனமிட்டோர்
   2. அல்குர்ஆனுக்கு விளக்கம் அளித்தோர்
   3. அல்குர்ஆனை திறன் பட ஓதக்கூடியோர்.
   4. வஹியை எழுதி பதிவு செய்தோர்

7. ஹஜ்ஜூக்கு இஹ்ராம் நிய்யத்து வைத்தவர் செய்ய அனுமதிக்கப்படாத ஒரு செயல்
   1. குளித்தல்  2. மனம் பூசுதல்
   3. புறம் பேசுதல்  4. சுன்னத்தான தொழுகையை நிறைவேற்றல்

8. இமாம் அபூஹனீபா (றஹ்) அவர்களின் சிறப்புப் பெயர்
   1. ஆலிமுல் குரைஷ்  2. இமாமுல் அஃலம்
   3. இமாமுல் மதீனா  4.ஸைபுல்லாஹ்

9. ஜனாஸா தொழுகையில் இரண்டாம் தக்பீருக்கு பின்னர் ஓத வேண்டியவை
   1. நபி ஸல் அவர்கள் மீது ஸலவாத் சொல்லல்
   2. சூரத்துல் பாத்திஹா ஓதுதல்
   3. ஜனாஸாவுக்காக பிரார்த்தித்தல்
   4. ஸலாம் கூறல்.

10. பின்வருவோரில் மஹ்ரமிகள் என்போர்
   1. சாச்சியின் மகள் 2. மாமியின் மகள்.
   3. சாச்சாவின் மகள் 4. மகனின் மனைவி

11. தடை செய்யப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள்
   1. அல் முராபஹா 2. அர்ரிபா
   3. அல் இஜாரா 4. அல் முழாரபா

12. கீழே "அ" நிரலில் சில சொற்களும் "ஆ" நிரலில் அதன் கருத்துக்களும் தரப்பட்டுள்ளன.

| நிரல் "அ" | நிரல்"ஆ" |
|---|---|
| 1. ஹுதைபியா | A. ஸஹாபாக்கள் |
| 2. அகபா | B. யூதர்கள் |
| 3. மதீனா சாசனம் | C. அவ்ஸ், கஸ்ரஜ் |
| 4. பைஅதுர் ரிழ்வான் | D. குறைஷிக் காபிர்கள் |

   இங்கு "அ" நிரலுக்கு அமைய "ஆ" நிரல் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?
   1. ABCD 2. BADC 3. DCAB 4. DCBA

13. மூஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட சுஹுபுகள்
   1. 10 2. 20 3. 30 4. 50

14. குல்உ என்பது
   1.கணவன் மனைவியை விவாகரத்து செய்தல்
   2. மனைவி கணவனிடம் விவாகரத்து கோருதல்
   3. கணவனும் மனைவியும் சேர்ந்து பிரிதல்
   4. விவாகம் செல்லுபடியற்ற நிலையை அடைதல்

15. இஜ்திஹாத் என்பது யாது?
   1. இஸ்லாமிய சட்டத்துறை நிறுவனங்கள்
   2. புதிய பிரச்சினை ஒன்றுக்கு தீர்வை பெற்றுக் கொள்வதற்காக எடுக்கப்படும் முயற்சி
   3. இஸ்லாமிய வழிகாட்டல் முறை
   4. இஸ்லாமிய பிரச்சார நுட்ப முறை

16. கடற் படையை முதன் முதலில் உருவாக்கிய இஸ்லாமிய ஆட்சியாளர்
   1. உமர் (ரலி) 2. அபூபக்கர் (ரலி )
   3. உஸ்மான் (ரலி) 4. அலி (ரலி)

17. ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக செல்லும் ஒருவர் ஹஜ்ஜையும் உம்ராவையும் சேர்த்து நிறைவேற்றுவதாக நிய்யத்து வைத்தல் இச்செயற்பாடு
   1. அல் கிரான் எனப்படும் 2. அல் இப்ராத் எனப்படும்
   3. அத்தமத்துஃ எனப்படும் 4. அல் இபாதா எனப்படும்.

18. அரபு மொழி ஒவ்வொரு முஸ்லிமினதும் வீட்டு மொழியாக இருக்க வேண்டும் என விரும்புகிறேன் என கூறிய நம் நாட்டு அறிஞர்
   1. A.M.A. அஸீஸ் 2. சேர் மாக்கான் மாக்கார்
   3. T.B.ஜாயா 4. M.C.சித்தி லெப்பை

19. மணமகன் மணமகளுக்கு வழங்கும் நன்கொடை
   1. வலீமா 2. மஹர் 3. ஷாஹித் 4. வலி

20. 221 ஆடுகள் வைத்திருக்கும் ஒருவர் கொடுக்க வேண்டிய ஸகாத்தின் அளவு
   1. 5 பெண் ஆடுகள் 2. 4 பெண் ஆடுகள்
   3. 3 பெண் ஆடுகள் 4. 2 பெண் ஆடுகள்

21. பின்வருவனவற்றுள் மறுமை நாளை சுட்டாதது
1. யவ்முன் நஹ்ர் 2. யவ்முல் ஹிஸாப் 3. யவ்முல் பஃஸ் 4.யவ்முல் கியாமா

22. மனிதனது புறத்தோற்றம் அரபியில் எவ்வாறு அழைக்கப்படும்
1. ஹல்க் 2. ஹுலுக் 3. அதப் 4. தக்வா

23. உமர் (ரலி) அவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே இடம்பெற்ற உமர் சாசனம் எங்கே கைச்சாத்திடப்பட்டது.
1. நகர்வான் 2. கூபா 3. மக்கா 4. குத்ஸ்

24. ஈஜாப், கபூல் என்ற சொற்பிரயோகங்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்
1. கொடுக்கல் வாங்கல்-திருமணம் 2. விவாகரத்து, கொடுக்கல் வாங்கல்
3. திருமணம், விடுதலை 4. விவாகரத்து, வியாபாரம்

25. அல்குர்ஆனை தொகுப்பதற்கு ஆலோசனை வழங்கிய நபித்தோழர்
1.சைத் இப்னு சாபித் (ரலி) 2. உமர் (ரலி)
3. முஆவியா (ரலி) 4. அபூ உபைதா (ரலி)

26. கணவன் மரணித்த கர்ப்பிணிப் பெண்ணின் இத்தா காலம்
1. 3 மாதங்கள் 2. 4 மாதங்கள் 10 நாட்கள்
2. பிரசவம் வரை 4. 4 மாதங்கள்

27. ஐந்து நிகழ்வுகள் இடம் பெற முன்னர் ஐந்து வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள் அவற்றுள் ஒன்று
1. நோய் வருமுன் ஆரோக்கியம் 2. திருமணத்திற்கு முன் வாலிபம்
3. மரணத்திற்கு முன் தவ்பா 4. முதுமைக்கு முன் ஆரோக்கியம்

28. ஸலாத்துல் இஸ்திஸ்கா என்பது
1. கிரகணத் தொழுகை 2. இரு பெருநாள் தொழுகை
3. மழை வேண்டி தொழும் தொழுகை 4. தேவையை வேண்டி தொழும் தொழுகை

29. நஜீயுல்லாஹ் என அழைக்கப்பட்ட நபி
1. ஆதம் (அலை) 2. சாலிஹ் (அலை) 3. நூஹ் (அலை) 4. இப்ராஹிம் (அலை)

30. ஸக்காத் பெற தகுதியானவர்களில் அர்ரிகாப் எனும் பிரிவினர்
1. உரிமைச் சீட்டு எழுதப்பட்ட அடிமை 2. நியாயமான காரணங்களுக்காக கடன் பட்டோர்
3. வழிப்போக்கர்கள் 4. இஸ்லாத்தின் பால் கவரப்பட்டவர்கள்.

31. அதிகமான மக்கள் அலட்சியமாக நடந்து கொள்ளும் இரு அருட்கொடைகள்
1. தொழுகை-நோன்பு 2. பார்த்தல், செவியேற்றல்
3. உணவு, குடிபானம் 4. ஆரோக்கியம், ஓய்வு

32. முதன்மைப்படுத்தப்பட வேண்டியவை பற்றிய சட்ட நோக்கு
1. பிக்ஹுல் உஸ்ரா 2. பிக்ஹுல் முஆமலாத்
3. பிக்ஹுல் அவ்லவிய்யாத் 4. பிக்ஹுல் மஸாயில்

33. அப்பாசிய கலீபா ஒருவரினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மார்க்கப் போதகர்
1. வஹப் இப்னு அபீ ஹப்ஸா (ரலி) 2. ஷிஹாபுத்தீன் ஸுஹ்ரி
3. ஒராபி பாஷா 4. காலித் பின் பகாயா

34. மறுமை வாழ்வுடன் தொடர்புடைய விடயங்கள்
1.அந்நுபுவ்வாத் 2.அர்ரூஹானிய்யாத்.
3.அல் இலாஹிய்யாத் 4.அஸ்ஸம்இய்யாத்

35. அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள இரும்பை பயன்படுத்தி பெரும் சுவர், அணைக்கட்டு என்பவற்றை நிர்மாணித்த மன்னன்
1. ஸகரிய்யா (அலை) 2. தாவூத் (அலை)
3. துல்கர்ணைன் 4. குகைவாசிகள்

36. இறுதி அத்தஹிய்யாத் இருப்பு அழைக்கப்படுவது
1. இப்திராஷ் 2. தவர்ருக் 3.தவக்குல். 4. இஃதிதால்

37. தாருல் பகா என்பது
1. இவ்வுலக வாழ்வு 2. கப்ரு வாழ்வு
3. மறுமை வாழ்வு 4. நரக வாழ்வு

38. நபி (ஸல்) அவர்கள் தன்னை ஆக்கிப் என குறிப்பிட்டார்கள். இதில் ஆக்கிப் என்பது
1. இறுதியானவர். 2. இல்லாதொழிப்பவர்
3. ஒன்று சேர்ப்பவர் 4. பரிந்துரை செய்பவர்

39. ரமலானுடைய காலத்தில் நோன்பு நோற்றவர்கள் நோன்பு நோற்காதவர்கள் அனைவரும் மேற்கொள்ளும் ஓர் இபாதத்
1.ஸதகா 2.கியாமுல் லைல் 3.தராவீஹ். 4.ஸகாதுல் பித்ர்

40. உம்மத் எனும் அரபுச் சொல்லின் மொழிக் கருத்து
1. சகவாழ்வு 2. அன்பு 3. சமூகம் 4. ஒன்றுபடல்

(40X1 = 40 புள்ளிகள்)

***

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

**கல்வி அமைச்சு** | 16 | T | I, II |

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

# இஸ்லாம் - I, II

## இஸ்லாம் - II

**அறிவுறுத்தல்கள்**

* முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

*01.*

1. இஸ்லாமிய அகீதாவுக்கு அடிப்படையாக அமைகின்ற மூலாதாரங்கள் இரண்டு தருக.
2. ஸக்காத் பெற தகுதியற்ற இரண்டு பிரிவினரை குறிப்பிடுக
3. இஜ்மாவின் வகைகள் இரண்டு தருக.
4. போலி நபிமார்கள் இருவரைத் தருக
5. அல்குர்ஆனில் கூறப்படும் அற்புதங்கள் இரண்டு தருக.
6. இமாம் மாலிக், இமாம் ஷாபிஈ ஆகியோரின் சிறப்பு பெயர்களை தருக.
7. பிள்ளைகள் பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமைகள் இரண்டினை குறிப்பிடுக
8. ஷிர்க்குல் அஸ்கருக்கு இரண்டு உதாரணங்கள் தருக.
9. குப்ரை ஏற்படுத்தும் வழிமுறைகள் இரண்டு தருக.
10. கலீபா உமர் (ரலி) அவர்களின் பணிகள் இரண்டு தருக. (2×10 = 20 புள்ளிகள்)

*02.*

1. அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ என்போர் யார்.
2. அகீதாவின் தூய்மையை பாதுகாக்க உழைத்த இமாம்கள் மூவரின் பெயர்களை தருக
3. அகீதாவின் பிரிவுகள் தோன்றுவதற்கான காரணிகள் யாவை? (2+3+5 = 10 புள்ளிகள்)

*03.*

1. ஸுஹ்த், ரஹ்பானிய்யா ஆகியவைகளுக்கு இடையிலான வேறுபாட்டை குறிப்பிடுக.
2. தவ்பா ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள் மூன்று தருக.
3. இஸ்லாம் போதிக்கும் நற்பண்புகள் ஐந்தினைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றிற்கும் நபி (ஸல்) அவர்களின் வாழ்விலிருந்து ஒவ்வொரு உதாரணம் தருக.

(2+3+5 = 10 புள்ளிகள்)

*04.*

1. ஹஜ்ஜின் பர்ழுகள் இரண்டு தருக
2. ஹஜ் செய்யும் முறைகள் மூன்றினையும் குறிப்பிட்டு விளக்குக
3. ஹஜ்ஜின் முஹர்ரமாத்துகள் ஐந்து தருக. (2+3+5=10 புள்ளிகள்)

*05.*

1. முஜாஹததுன் நப்ஸ் என்றால் என்ன.
2. அல்குர்ஆன் குறிப்பிடும் உள்ளத்தில் மூன்று நிலைகளையும் குறிப்பிடுக.
3. உள்ளத்தை பரிசுத்தப்படுத்துவதற்காக நாம் கடைபிடிக்க வேண்டிய விடயங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

***06.***

1. *இஸ்லாம் தடை செய்துள்ள வர்த்தக முறைகள் இரண்டு தருக*
2. *இஸ்லாம் அனுமதித்துள்ள வர்த்தக முறைகள் மூன்றை குறிப்பிட்டு சிறு குறிப்பு எழுதுக.*
3. *பொருளீட்டலின் போது கடைபிடிக்க வேண்டிய ஷரிஅத் வரையறைகள் 5 இனை விளக்குக.*

(2+3+5=10 புள்ளிகள்)

***07.*** *பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டுக்கு சிறு குறிப்பு எழுதுக.*

1. *பொறுமை*
2. *இஸ்லாத்தில் மனித உரிமைகள்*
3. *உழைப்பின் முக்கியத்துவம்*
4. *திருமணத்தின் நோக்கங்கள்*

(5+5=10 புள்ளிகள்)

***